

ஆஸ்திரேலியாவின் ஹோபார்ட் நகரத்தில் உள்ள டாஸ்மானியா வேளாண்மை ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தில் 25.7.2024 அன்று வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தலைமையில் பல்துறை வல்லுநர்களுடன் கலந்துரையாடல் மற்றும் தொழில் நுட்பங்கள் தொடர்பான கருத்து பரிமாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டது. இந்நிகழ்வில் தமிழ்நாடு அரசின் வேளாண்மை – உழவர் நலத்துறை அரசு முதன்மைச் செயலாளர் மற்றும் வேளாண்மை உற்பத்தி ஆணையர் செல்வி. அபூர்வா, கோயம்புத்தூர் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைகழக துணை வேந்தர் முனைவர். வி.கீதாலெட்சுமி, நீர் மற்றும் புவியியல் ஆய்வு மைய இயக்குநர் முனைவர். பழனிவேலன், இயக்குநர் (ஆராய்ச்சி) முனைவர். எம். ரவீந்திரன், டாஸ்மானியா பல்கலைக் கழக பிரதிநிதிகளாக பேராசிரியர் மைக்கேல்ரோஸ், பேராசிரியர் அலிஸ்டர்கிரேசி, பேராசிரியர் ராபர்ட்ஷெல்லி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



கோயம்புத்தூர் மாவட்டம், கிணத்துக்கடவு அரசு மேல்நிலைப் பள்ளியில் நேற்று முன்தினம் (27.07.2024) STEM கண்டுபிடிப்பு மற்றும் கற்றல் மையத்தினை (STEM Innovation and Learning Center) பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, இஸ்ரோ முன்னாள் இயக்குநர் பத்மஸ்ரீ. டாக்டர். மயில்சாமி அண்ணாதுரை முன்னிலையில் திறந்து வைத்து பார்வையிட்டார். அருகில் மாவட்ட ஆட்சித்தலைவர் கிராந்தி குமார் பாடி, அமெரிக்கன் இந்தியா ஃபவுண்டேஷன் டிஜிட்டல் ஈக்வலைசர் தலைவர், டாக்டர்.பாஸ்கரன் தீனதயாளன், முதன்மை கல்வி அலுவலர் பாலமுரளி ஆகியோர் உள்ளனர்.

### இன்று பொதுக்குழு உறுப்பினர்கள்

# அ.மகாதேவன் - காரை இரா.செழியன் நினைவுதினம்!

## அமைச்சர் கே.ஆர்.பெரிய கருப்பன் தலைமையில் தி.மு.க.வினர் மலர் அஞ்சலி!

சிவகங்கை, ஜூலை 29 -

சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூரரைச் சேர்ந்தவர் அ.மகாதேவன் இவர் ஒன்றிய செயலாளராகவும், பொதுக்குழு உறுப்பினராக இருந்தவர்.

சிவகங்கை மாவட்டத்தில் கழகத்தின் வளர்ச்சிக்காக தீவிர பணியாற்றிய கழக முன்னோடி ஆவார். இவர் 2013 ஆம் ஆண்டு ஜூலை 29ஆம் தேதி மறைவெய்தினார். ஒவ்வொரு ஆண்டும் மகாதேவன் நினைவுதினம் சூலை மாதம் 29ம்தேதி தி.மு.க சார்பில் அனுசரிக்கப்படுகிறது.

இன்று (29ஆம் தேதி திங்கட்கிழமை) அ.மகாதேவனின் 11வது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு காலை 9 மணி அளவில் திருப்பத்தூரில் அவரது இல்லத்தில் கூட்டுறவுத் துறை அமைச்சரும், சிவகங்கை மாவட்ட கழக செயலாளருமான கே.ஆர். பெரிய கருப்பன் தலைமையில் அ.மகாதேவன் திருவுருவப்படத்திற்கு தி.மு.க.வினர் மலர் அஞ்சலி செலுத்துகிறார்கள் ..

இதேபோல் திருப்பத்தூர் ஒன்றிய கழக செயலாளராகவும், பொதுக்குழு உறுப்பினராக இருந்தவர் காரை.இரா.செழியன். இவர் 2018 ம்ஆண்டு சூலை 29ம்தேதிமறைவெய்தினார். இவரது 6வது ஆண்டு நினைவுநாள் இன்று (திங்கட்கிழமை 29ம் தேதி) காரையூரில் அனுசரிக்கப்படுகிறது. .

காலை10.00மணி அளவில் காரையூரில் இரா. செழியன் படத்திற்கு கூட்டுறவுத்துறை அமைச்சரும், மாவட்டக் கழக செயலாளருமான கே.ஆர்.பெரிய கருப்பன் தலைமையில் தி.மு.க. நிர்வாகிகள் மலர் அஞ்சலி செலுத்துகிறார்கள்.

### கர்நாடக மாநிலத்தில்

# உயிரிழந்த ஓட்டுநர் குடும்பத்திற்கு நிவாரண நிதி!

## சட்டமன்ற உறுப்பினர் தே.மதியழகன் வழங்கினார்!

கிருஷ்ணகிரி, ஜூலை 29-

கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை உள்வட்டம், எம்.வெள்ளாப்பட்டி கிராமத்தைச் சேர்ந்த முருகன் என்பவர் கடந்த 16.07.2024 அன்று LPG டேங்கர் லாரியில் ஓட்டுநராக சென்றபோது கர்நாடகா மாநிலம், வடகன்னட மாவட்டம், அங்கோலா வட்டம், சிரூரு பகுதியில் பெய்த கனமழை காரணமாக ஏற்பட்ட நிலச்சரிவு மற்றும் காட்டாற்று வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்டு உயிரிழந்தார்.

இந்த விபத்தில் உயிரிழந்த லாரி ஓட்டுநர் முருகன் அவர்களின் குடும்பத்தினருக்கு முதலமைச்சர் அவர்கள் ஆறுதல் தெரிவித்ததோடு, முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ.3 இலட்சம் வழங்க 25.07.2024 அன்று உத்தரவிட்டார். அதனைத்தொடர்ந்து, கிழக்கு மாவட்ட செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான தே. மதியழகன் மாவட்ட ஆட்சித்தலைவர் சரயு, ஆகியோர் லாரி ஓட்டுநரின் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறி, அவரது மனைவி செவ்வந்தி அவர்களிடம் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ.3 இலட்சத்திற்கான காசோலையை வழங்கினார்கள். மறைந்த முருகன் அவர்களுக்கு திவ்யஸ்ரீ என்கிற மகளும், மேகன் என்ற மகனும் உள்ளனர். இந்நிகழ்வில், மாநில மகளிர் ஆணைய குழு உறுப்பினர் மரு.மாலதி, மாவட்ட அறங்காவலர் குழு தலைவர் ரஜினிசெல்வம், ஊத்தங்கரை ஒன்றிய குழு தலைவர் உஷாராணி குமரேசன், ஊத்தங்கரை பேரூராட்சி தலைவர் அமானுல்லா, மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினர் கதிரவன், மற்றும் ஒன்றிய கழக செயலாளர் சாந்தமூர்த்தி, பேரூர் கழக பொறுப்பாளர் பார்த்திபன், உள்ளாட்சி பிரதிநிதிகள் உடனிருந்தனர்.

### ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து

# மயிலாடுதுறையில் கழகத்தினர் ஆர்ப்பாட்டம்!

## மாவட்டச் செயலாளர் நிவேதா முருகன் தலைமையில் ஆயிரக்கணக்கானோர் பங்கேற்பு!

மயிலாடுதுறை, ஜூலை 29 -

மயிலாடுதுறை மாவட்ட தி.மு.க. சார்பில் ஒன்றிய நிதிநிலை அறிக்கையில் தமிழகத்திற்கு எந்த ஒரு நிதியும் வழங்காமல் வஞ்சித்த பாசிச பா.ஜ.க. அரசை கண்டித்து மயிலாடுதுறை மாவட்ட தலைமை தபால் நிலையம் முன் மாபெரும கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்திற்கு மயிலாடுதுறை நகரக் கழகச் செயலாளர் குண்டாமணி (எ) என். செல்வராஜ் தலைமை தாங்கினார். ஒன்றியக் கழகச் செயலாளர்கள் ஞான.இமையநாதன், மூவலூர் எம்.மூர்த்தி, பி.முருகமணி, செல்லசேது.ரவிக்குமார், பி.எம்.அன்பழகன், எம்.அப்துல்மாலிக், அமிர்த. விஜயகுமார், ஏ.ஜி.ஜெ.பிரபாகரன், பஞ்சு.குமார், மங்கை எம்.சங்கர், ஏ.ஆர். ராஜா, கு.வைத்தியநாதன், மலர்விழிதிருமாவளவன், சீர்காழி நகரக் கழகச் செயலாளர் ம.சுப்பராயன், பேரூர் கழகச் செயலாளர்கள் எம்.அன்புச்செழியன், எம்.சம்சுதீன், என்.அண்ணாதுரை, எஸ்.கே.முத்துராஜா ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மயிலாடுதுறை வடக்கு ஒன்றியக் கழகச் செயலாளர்கள் என்.இளையபெருமாள் வரவேற்றார்.

ஆர்ப்பாட்டத்தில் மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்ட மன்ற உறுப்பினர் நிவேதா எம்.முருகன் கண்டன உரையாற்றினார்.

ஆர்ப்பாட்டத்தில் கழக உயர்நிலை செயல்திட்ட குழு உறுப்பினர் குத்தாலம் பி.கல்யாணம், சீர்காழி சட்டமன்ற உறுப்பினர் எம். பன்னீர்செல்வம், கழக கொள்கை பரப்பு துணைச் செயலாளர் குத்தாலம் க.அன்பழகன், கழக விவசாய அணி இணைச் செயலாளர் ஆர்.அருள்செல்வம், கழக விவசாய தொழிலாளர் அணி இணைச் செயலாளர் ஜெக.வீரப்பாண்டியன், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர்கள் கி.சத்திய சீலன், எம்.எம்.சித்திக், ஏ.சி. என்.சிவபாலன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ஜி.என்.ரவி, முத்து.மகேந்திரன், இராம.இளங்கோவன், மாவட்டக் கழக அவைத்தலைவர் கே.ஜி.சீனிவாசன், துணைச் செயலாளர்கள் மு.ஞானவேலன், எஸ்.செல்வமணி, கண்ணகிபன்னீர்செல்வம், மாவட்டக் கழக பொருளாளர் மகா.அலெக்சாண்டர், தகவல் தொழில் நுட்ப அணி தஞ்சை மண்டல பொறுப்பாளர் பி.எம். ஸ்ரீதர், பொதுக்குழு உறுப்பினர்கள் எஸ்.சங்கரநாராயணன், பி.சிவதாஸ், அர்சத், எஸ்.சுவாமிநாதன், அ.காந்தி, ஜெ.கபிலன், நத்தம் ஏ.வின்சென்ட், எஸ்.வெற்றிவேல், பி.கென்னடி, சுபாநெடுஞ்செழியன், அரசு வழக்கறிஞர் இரா.சேயோன், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் உமாமகேஸ்வரிசங்கர், ஒன்றியக் குழு தலைவர்கள் கே.மகேந்திரன், வி.ஜெயபிரகாஷ், காமாட்சிமூர்த்தி, நந்தினிஸ்ரீதர், கமலஜோதி தேவேந்திரன், சீர்காழி நகர் மன்ற தலைவர் துர்கா பரமேஸ்வரி ராஜசேகர், கண்மணி அறிவழகன், சங்கீதாமாரியப்பன், பேரூராட்சி தலைவர்கள் பூங்கொடி அலெக்சாண்டர், சுகுணசங்கரிகுமரவேல் மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள் எம். கே.மருது, வி.எஸ்.என்.செந்தில், சி.சௌமியன், பெரு வீரமணி, டி.ராஜசேகர், இரா.மனோகரன், எஸ். எம்.சம்சுதீன், காழி.கலைவாணன், இரா.முருகன், ஆர்.சாந்தி, இரா.செல்வராஜ், இரா.தன்ராஜ், மா. வைத்தியநாதன், வெடி எஸ்.பாலமுருகன், வி.எஸ். பிரபாகரன், எம்.எஸ்.முத்துக்குமரன், கே.விக்னேஷ், எஸ்.பாலாஜி, தீபாசத்தியேந்திரன், காளி.தேசப்பன், ஆர்.எஸ்.ஸ்ரீதர், க.அறிவுச்செல்வன், இரா.முருகப்பா மற்றும் ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், கிளை, வார்டு கழக நிர்வாகிகள், கழகத்தினர் உள்ளிட்ட 5000த்திற்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டனர். முடிவில் மாவட்டக் கழக துணைச் செயலாளர் மு.ஞானவேலன் நன்றி கூறினார்.




கோவை கிணத்துக்கடவு அரசு மேல்நிலைப் பள்ளியில் அமெரிக்கா இந்திய பவுண்டேஷன் சார்பில் ஸ்டெம் கண்டுபிடிப்பு மற்றும் கற்றல் மையம் திறப்பு விழா நிகழ்ச்சி நடைபெற்றது இதில் பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி மற்றும் இஸ்ரோ விஞ்ஞானி மயில்சாமி அண்ணாதுரை கலந்து கொண்டு மையத்தை திறந்து வைத்தனர் பின்னர் மாணவர்களிடையே அமைச்சர் அன்பில் மகேஷ் பேசுகையில் சமுதாயத்தில் என்ன கற்றுக் கொண்டு இருக்கிறோமோ அதை திருப்பி சமுதாயத்திற்கு கொடுக்க வேண்டும் என்பது நமது கடமை நாம் படித்தோம் நாம் சம்பாதித்தோம் என்று இல்லாமல் நாம் நன்றாக இருக்கிறோம் என்று என்னாமல் நம்மை நம்பியுள்ள இந்த சமுதாயத்திற்கு நாம் என்ன செய்யப் போகிறோம் என்பதை நினைக்கும் மாணவர்களாக உருவாக வேண்டும் என்று கூறினார். நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித் தலைவர் கிராந்திகுமார்பாடி, மாவட்ட கவுன்சிலர் பள்ளியின் முன்னாள் மாணவர் சங்க செயலாளர் ராஜா, கிணத்துக்கடவு பேரூராட்சி தலைவர் கதிர்வேல், கனகராஜ் உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ஏ. அண்ணாதுரை

### ஜூலை 29 (2014)



வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் ஒன்றியக் கழகச் செயலாளராக ஆறு முறையும் – திருப்பத்தூர் ஒன்றியக்குழுத் தலைவராக இரண்டு முறையும், மாடப் பள்ளி கூட்டுறவு சேவை சங்கத் தலைவராக இரண்டு முறையும் பொறுப்பேற்று திறம்பட பணியாற்றியவர்.

நெருக்கடிநிலையின்போது கைது செய்யப்பட்டு மிசா கைதியாக சிறையில் இருந்தவர். மொழிப் போராட்டம், இலங்கை தமிழர் ஆதரவு போராட்டம் உள்ளிட்ட கழகம் அறிவித்த அனைத்து அறப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

### அம்பத்தூர் பால் பண்ணை பராமரிப்புப் பணி!

# இடையூறு இல்லாமல் சென்னையில் ஆவின் பால் வழங்க ஏற்பாடு!

## ஆவின் நிர்வாகம் தகவல்!

சென்னை, ஜூலை 29–

ஆவின் நிறுவனம் சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் சுமார் 15 லட்சம் லிட்டர் பால், சில்லறை விற்பனையாளர்கள், பால் டெப்போக்கள் மற்றும் மொத்த விற்பனையார்கள் மூலமாக பொதுமக்களுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

இந்நிலையில் 26.07.2024 அன்று முதல் அம்பத்தூர் பால்பண்ணையில் பராமரிப்பு பணி தொடங்கப்பட்டு சுமார் 20 நாட்கள் நடைபெற உள்ளதால் பால் உற்பத்திக்கு இடையூறு ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக சென்னையில் உள்ள மற்ற பால் பண்ணைகளிலும் மற்றும் பாடலூர் பால் பண்ணையில் இருந்தும் சுமார் ஒரு லட்சத்து 50 ஆயிரம் லிட்டர் பால் சென்னைக்கு கொண்டுவரப்பட்டு மொத்த விற்பனையாளர்கள் மற்றும் சில்லறை விற்பனையாளர்களுக்கு விநியோகிக்கப்படும்.

எனவே பொதுமக்களுக்கு எவ்வித இடையூறும் இல்லாமல் பால் விநியோகிக்க அனைத்து வகையான முன்னேற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

இவ்வாறு ஆவின் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

### குளித்தலை 16வது வார்டு கழகச் செயலாளர்

# ஏ.சுரேஷ் மறைவு!

## கழகத்தினர் அஞ்சலி!

கரூர், ஜூலை 29-

கரூர் மாவட்டம், குளித்தலை நகராட்சி, 16வது வார்டு கழகச் செயலாளரும், 16வது வார்டு குளித்தலை நகர் மன்ற உறுப்பினருமான ஏ.சுரேஷ் (வயது 53) அவர்கள் 27.07.2024 அன்று சனிக்கிழமை மதியம் 12.00 மணியளவில் மாரடைப்பு ஏற்பட்டு சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்தார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

இவரது மனைவி பெயர் எஸ்.சுமதி (வயது 42). மகள் எஸ்.காவியா (வயது 22), மகன் எஸ்.கதிர் (வயது 17) உள்ளனர்.

இவர் 2006 முதல் குளித்தலை நகர கழகத்தில் பிரதிநிதியாகவும், 2019 முதல் 16வது வார்டு கழகச் செயலாளராகவும், 2022 முதல் குளித்தலை 16வது வார்டு நகர்மன்ற உறுப்பினராகவும் பணியாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

தகவல் அறிந்ததும் கழகத்தினர் ஏராளமானோர் அன்னாரது உடலுக்கு மலரஞ்சலி செலுத்தினர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### திருப்பத்தூர் அ. மகாதேவன்

### ஜூலை 29 (2013)



சிவகங்கை மாவட்டத்தில் கழகத்தின் வளர்ச்சிக்காக அயராது பணியாற்றியவர். ஒன்றுபட்ட இராமநாதபுரம் மாவட்டத்தில் அனைத்து கிராமங்களுக்கும் சென்று கழகத்தினை வளர்த்தவர்.

ஒன்றியச் செயலாளர், மாவட்ட துணைச் செயலாளர், மாவட்ட பொருளாளர், தலைமைச் செயற்குழு உறுப்பினர் உள்ளிட்ட பொறுப்புகளை வகித்தவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர். மிசா சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு சிறையில் இருந்தவர்.

“பிராமண சமுதாயத்தைச் சேர்ந்த இவர், அந்தகாலத்திலேயே கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு தீவிரமாக பணியாற்றியவர்” என தலைவர் கலைஞர் தனது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்..

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**